சுருக்கம்

பணியமைப்பு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திருமதி.கோ.சுகன்யா – கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் – திருநெல்வேலி, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அலுவலகத்தில் 25.01.2022 முற்பகல் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(எம்.1)த் துறை

அரசாணை (3டி) எண்.16

நாள் 06.11.2023

சோபகிருது வருடம், ஐப்பசி 20,
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்க:

1. திருமதி.கோ.சசிகலா, க/பெ.திரு.ரா.கோபி என்பவரின் விண்ணப்பம் நாள் 22.11.2016.
2. முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையரின் செயல்முறை ஆணை எண். ஜி3/50175/2016, நாள் 19.01.2022.
3. முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையரின் கடித எண். ஜி3/35157/2022 , நாள் 27.01.2023.

------

ஆணை:-

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் திண்டுக்கல், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகத்தில் காவலராக பணிபுரிந்த திரு.ரா.கோபி என்பவர் பணியில் இருந்தபோது 21.04.2016 அன்று மரணமடைந்ததால், அவரது வாரிசுதாரரும் மகளுமான திருமதி.கோ.சுகன்யா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் அளிக்குமாறு பணியிடை இறந்த அரசு ஊழியரின் மனைவி திருமதி.கோ.சசிகலா என்பவர் 22.11.2016 அன்று விண்ணப்பம் அளித்துள்ளார்.

2. திருமதி.கோ.சுகன்யா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் அளிக்க கோரிய விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையரின் செயல்முறை

ஆணை மூலம் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் 25.01.2022 அன்று முற்பகல் முதல் திருநெல்வேலி, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். தனியர் மார்ச் 2006–இல் பத்தாம் வகுப்பு கல்வித் தகுதியை நிறைவு செய்துள்ளார். அவரது பிறந்த தேதி 02.02.1991 ஆகும்.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி.கோ.சுகன்யா என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 25.01.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இந்நிலையில், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, திண்டுக்கல், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகத்தில் காவலராக பணிபுரிந்து 21.04.2016 அன்று பணியிடை மரணமடைந்த திரு.ரா.கோபி என்பவரின் மகள் திருமதி.கோ.சுகன்யா, கருணையடிப்படையில் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், இளநிலை உதவியாளராக 25.01.2022 முற்பகல் முதல் பணிநியமனம் செய்யப்பட்டதையடுத்து, அவரது பணி அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் 25.01.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடுகிறது.

5. தனியரின் பணி முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை நடைமுறையில் உள்ள விதிகளின்படி பெறத் தகுதியுடையவராவார்.

6. இவ்வரசாணை மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா. எண். efile 4907/ஜி2/2023, நாள் 27.09.2023 மூலம் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

//ஆளுநரின் ஆணைப்படி//

குமார் ஜயந்த்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்

திருமதி.கோ.சுகன்யா, இளநிலை உதவியாளர்,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அலுவலகம்,
திருநெல்வேலி.
(முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர்,
சென்னை – 600 006 அவர்கள் வழியாக).

முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர், சென்னை– 600 006.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் (மு.கூ.பொ), சென்னை – 600 032.

<u>நகல்:</u>

மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை– 600 009.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (அநமு.2) துறை,
சென்னை– 600 009.

மாநில கணக்காயர், சென்னை–600 018.

சம்பந்தப்பட்ட கருவூல / சம்பளக் கணக்கு அலுவலர்.

சுத்த நகல் கோப்பிற்கு (கோ.எண்.758/எம்.1/2023)

இருப்புக் கோப்பு / உதிரிநகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

6/11/2023

பிரிவு அலுவலர்

6/11/23